# 'அலோபதியில் குணப்படுத்த முடியாத நோய்களை கூட ஹோமியோபதியில் குணப்படுத்த முடியும்'



சென்னையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஹோமியோபதி தேசிய கருத்தரங்கில் ஹோமியோபதி மருத்துவத்தின் தந்தை என்று அழைக்கப்படும் ஹானிமனின் சிலைக்கு மாலையிடுகிறார் புனேவைச் சேர்ந்த ஹோமியோபதி மருத்துவர் அமர்சின்ஹா டி.நிக்காம். உடன் (இடமிருந்து) ஹோமியோ சங்கங்கள் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் பழ.வெள்ளைச்சாமி, மத்திய ஹோமியோபதி ஆராய்ச்சிக் கவுன்சிலின் உதவி இயக்குநர் கொள்ளிராஜூ மற்றும் மருத்துவர் கைலாசம்.

சென்னை,ஏப்.17: அலோபதி மருத்துவத்தில் குணப்படுத்த முடியாத நோய்களை கூட ஹோமியோபதி மருத்துவத்தில் குணப்படுத்த முடியும் என்று புனேவைச் சேர்ந்த ஹோமியோபதி மருத்துவர் டாக்டர் அமர்சின்ஹா டி.நிக்காம் தெரிவித்தார்.

ஹோமியோபதி மருத்துவத்தின் தந்தை என்று அழைக்கப்படும் ஹானிமனின் 256-வது பிறந்த நாளை முன்னிட்டு, சிறப்பு தேசிய கருத்தரங்கம் சென்னை சர்.பிட்டி.தியாகராயர் அரங்கத்தில் ஞாயிற்றுக்கிழமை (ஏப்.17) நடைபெற்றது.

நிகழ்ச்சியில் மருத்துவர் அமர்சின்ஹா டி.நிக்காம் பேசியது:

ஹோமியோபதி மருத்துவம் தமிழகத்தைப் பொருத்தவரை சிறிய அளவில்தான் பயன்பாட்டில் உள்ளது. அலோபதி மருத்துவத்தில் குணப்படுத்த முடியாத நோய்களைக்கூட ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் குணப்படுத்த முடியும் என்றார் அவர்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மத்திய ஹோமியோபதி ஆராய்ச்சிக் கவுன்சிலின் உதவி இயக்குநர் கொள்ளிராஜூ பேசியது:

மத்திய ஹோமியோபதி ஆராய்ச்சிக் கவுன்சில் இதுவரை சுமார் 3 ஆயிரம் மருந்துகளை கண்டுபிடித்துள்ளது. மருந்துகளைக் கண்டுபிடித்து அவை சரியாக வேலை செய்கிறதா என்பதையும் பரிசோதிக்கிறது.

இந்தியாவில் மொத்தம் 24 ஹோமியோபதி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. தமிழகத்தைப் பொருத்தவரை, சென்னையிலும், ஊட்டியிலும் ஹோமியோபதி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

ஊட்டியில் உள்ள மூலிகைச் செடிகள் சேகரிப்பு நிறுவனத்தின் மூலம் 100-க்கும் மேற்பட்ட ஹோமியோபதி மருத்துவ மூலிகைச் செடிகள் சேகரிக்கப்பட்டுள்ளன. அங்குள்ள மலைப் பிரதேசங்களில் அதிகமான அளவு மூலிகைச் செடிகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து ஆராய்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது.

ஹோமியோபதியில் ஆராய்ச்சி மேற்கொள்வோருக்கு மத்திய அரசின் மானியம் வழங்கப்படுகிறது. அதனை ஆராய்ச்சியாளர்கள் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் அவர்.

ஹோமியோ சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர் அ.பத்மநாபன், பொதுச் செயலாளர் பழ.வெள்ளைச்சாமி, 'அப்ரோச்' சென்னை அமைப்பின் பொருளாளர் அ.அப்துல் அஜீஸ் உள்ளிட்ட பலர் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

This is the matter released today in '**Dinamani**' (18th April 2011) about **Hahnemann Day 2011 Special National Seminar** organized successfully in a grand manner on **17th April 2011** at Sir Pitti Thyagaraya Auditorium, G.N. Chetti Road, T. Nagar, **Chennai** - 600 017

# "Homoeopathy medicines can cure the chronic diseases which cannot be cured by allopathy."



The Hmoeopathy National Conference held on Sunday, April 17th, 2011, Dr.Amarsinha D. Nikam, Pune, pays tributes to the statue of Dr. Hahnemann, the Father of Homoeopathy. (From the Left), Mr. Pazha Vellaiswamy, Gen. Secretary, Confederation of Homoeo Centres, Mr. Kolli Raju, Addl. Director, central Homoeopathy Research Council and Dr. Kailasam.

"Homoeopathy has an upper hand than allopathy in curing chronic diseases which cannot be cured by allopathy"

– Dr. Amarsinha D. Nikam.

To commemorate the 256th Birth Anniversary of Dr. Hahnemann, "Father of Homoeopathy Medical Treatment", a National Conference was arranged at Sir Pitti Thyagaraya Auditorium, G.N. Chetti Road, T. Nagar, **Chennai** - 600 017 on Sunday, April 17th 2011.

Further, Dr. Amarsinha D. Nikam said that the usage of Homoeopathy medicines & treatment is very limited in Tamilnadu. He said, Homoeopathy treats & cures the diseases which cannot be cured by allopathy treatments.

Mr. Kolli Raju, Add, Director, central Homoeopathic Research Council, said that the council has invented about 3000 medicines and does experiments of the same.

At present, all over India, there are 24 active Centers. In Tamilnadu, there are 2 centers, one each in Chennai & Ooty.

The Hillocks of Ooty has an aroma of Herbal Plants. Significantly. A lot of herbal plants are available in Ooty Hills and its surroundings. The herbal plant collection centre has collected hundreds of plants and the research is still going on.

He also said the Central Govt. is providing funds/subsidies to the researchers who do Research in Homoeopathy. The Researchers utilize the facility in an effective manner.

The Chairman of Conference of Homoeo Centres, Mr. A. Padmanabhan, Mr. Pazha Velliswami, Mr. Abdul Aziz, Treasurer of “APROACH”, also participated in the Seminar.